# முத்தாயம்மாள் நினைவுக் கல்லூரியில் பெற்றோர் - நிர்வாகத்தினர் கூட்டம்

இராசிபுரம் - காக்காவேரியில் அமைந்துள்ள முத்தாயம்மாள் நினைவு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 15.07.2016 அன்று 'பெற்றோர் - நிர்வாகத்தினர் கூட்டம்' கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்விற்கு கல்லூரித் தலைவர் திரு. ஆர். இராமசாமி தலைமை தாங்கினார். பொருளாளர் திரு. ஆர். பிரேம்குமார் மற்றும் முதல்வர் முனைவர் எம். ஆர். லட்சுமிநாராயணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்நிகழ்வில் கல்லூரியில் உள்ள உள்கட்டமைப்பு வசதிகள், மாணாக்கர்களுக்காக மிகக்குறைந்த கட்டணத்தில் இயங்கும் கல்லூரிப் பேருந்துகள், இலவச நவீன விடுதி வசதிகள், பல்கலைக்கழகத் தேர்வுகளில் இக்கல்லூரிப் பெற்றிருக்கும் சாதனைகள், தேர்வில் மதிப்பெண் குறைந்த மாணவர்களுக்கு வழங்கப்படும் சிறப்பு வகுப்புகள், நூலகம், முழுத் தகுதிவாய்ந்தப் பேராசிரியப்பெருமக்கள் போன்றவை குறித்து தலைவர், பொருளாளர், முதல்வர், துறைத்தலைவர்கள் மற்றும் மாணவ, மாணவிகள் பேசினர்.

பெரியார் பல்கலைக்கழகத் தேர்வுகளில் அதிக மதிப்பெண்கள் மற்றும் கணிதப் பாடங்களில் 100-க்கு 100 மதிப்பெண்கள் எடுத்த மாணவ, மாணவிகளுக்கும் கல்லூரித் தலைவர் திரு. ஆர். இராமசாமி பரிசுகள் வழங்கிப் பாராட்டினார்.

இந்நிகழ்வில் முத்தாயம்மாள் பாலிடெக்னிக் கல்லூரி முதல்வர் திரு. ஜி. விஜயகுமார், கல்லூரி உதவிப் பேராசிரியர்கள் எஸ். சிவக்குமார், ஆர். சங்கர், ஏ. பர்னபாஸ், ஏ. விஜயகுமார், எஸ். திவ்யா, கே. ஆனந்தி மற்றும் 2-ம் ஆண்டு, 3-ம் ஆண்டு மாணாக்கர்கள் பேசினர்.

சேலம், நாமக்கல், விழுப்புரம், கரூர், ஈரோடு, திண்டுக்கல், பெரம்பலூர், தேனி, நீலகிரி, தருமபுரி, கிருஷ்ணகிரி ஆகிய மாவட்டங்களில் இருந்து 700-க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகளும், பெற்றோர்களும், பாதுகாவலர்களும் கலந்து கொண்டனர்.